“தமிழ் எங்கள் உயிருக்கு நேர்”

# தமிழ்க் கல்விச்சேவை சுவிற்சர்லாந்து

# Tamil Education Service Switzerland

# பொதுத்தேர்வு 2020

## தமிழ்மொழி ஆண்டு 8

**நேரம்: 150 நிமிடம்**

**சுட்டெண்:** ____________________

# பகுதி - 1

**1. மிகப் பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.**

1 2 3

1. முதலெழுத்துகளுள் அடங்குபவை
   1. உயிரெழுத்துகள், ஆய்த எழுத்து
   2. உயிரெழுத்துகள், மெய்யெழுத்துகள்
   3. மெய்யெழுத்துகள், ஆய்த எழுத்து

2. தொகைச்சொல்லாக அமைவது
   1. இருதிணை
   2. இருகரம்
   3. இருவிழி

3. சிலப்பதிகாரம் என்னும் காப்பியத்தை இயற்றியவர்
   1. சேரன் செங்குட்டுவன்
   2. சீத்தலைச்சாத்தனார்
   3. இளங்கோவடிகள்

4. ஏரி, தடாகம், பொய்கை எனும் பல சொற்கள் குறிக்கும் ஒருபொருள்
   1. கழனி
   2. குளம்
   3. கடல்

5. இடையின மெய்யெழுத்துகளின் தொகுதியாக அமைவது
   1. க் ச் ட் த் ப் ற்
   2. ய் ர் ல் வ் ழ் ள்
   3. ங் ஞ் ண் ந் ம் ன்

6. மாணவர்கள் மலைகளிலிருந்து விழும் அழகுமிக்க நீர்வீழ்ச்சிகளைக் கண்டு மகிழ்ந்தனர். இதில் அழகு
   1. பொழில்
   2. அகிலம்
   3. எழில்

7. ஆழம் அறியாமல் காலை விடாதே. இதன் எழுவாய்
   1. ஆழம்
   2. நீ
   3. கால்

8. புலவருடன் இணைந்தது வறுமை. இதில் வறுமை என்பதன் எதிர்ப்பொருட்சொல்
   1. செல்வம்
   2. இன்பம்
   3. கடினம்

9. மூவேந்தருள் செந்தமிழ்மொழியை வளர்த்தவரெனச் சிறப்புப்பெறுபவர்
   1. சேரர்
   2. சோழர்
   3. பாண்டியர்

10. பண்டாரவன்னியன் பிரித்தானியருடன் இறுதியாகப் போரிட்ட இடம்
    1. உடையாவூர்
    2. வெற்றிலைக்கேணி
    3. பனங்காமம்

1 2 3

11. உழவனுக்கு உழத்தி போல பாணனுக்கு
    1. பாணி
    2. பாடினி
    3. பாணள்

12. காட்டுத்தீ போல சேதி உலகெங்கும் பரவியது. சேதி என்பதன் எழுத்துவடிவம்
    1. சேய்தி
    2. செய்தி
    3. சேதீ

13. சிறுவர்கள் ஒன்றுகூடி ஆடிப்பாடி மகிழ்ந்தனர். இதில் ஆடிப்பாடி என்பது
    1. இரட்டைக்கிளவி
    2. இணைமொழி
    3. அடுக்குமொழி

14. கல்வியின் சிறப்பினைக் கல்லாதவர்க்கும் விளங்கும்படி எளிமையாகப் பாடியவர்
    1. பாரதிதாசன்
    2. பாரதியார்
    3. உருத்திரமூர்த்தி

15. நிலத்தின் கீழ் அமைக்கப்பெறும் மறை வழி
    1. ஒழுங்கை
    2. பாதை
    3. சுருங்கை

16. சிங்கம் கர்ச்சிக்கும், அதுபோல குதிரை
    1. கத்தும்
    2. கனைக்கும்
    3. உறுமும்

17. காட்டுமல்லிகை மிடுக்கோடு மலர் நிறைந்து நின்றது. இதில் மிடுக்கு
    1. கர்வம்
    2. வாட்டம்
    3. பணிவு

18. சிங்கம் வந்தான். இதில் வந்துள்ள ஆகுபெயர்
    1. குணவாகுபெயர்
    2. உவமையாகுபெயர்
    3. கருத்தாவாகுபெயர்

19. இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவில் கொண்டாடப்பெறுவது
    1. வெள்ளிவிழா
    2. பொன்விழா
    3. பவளவிழா

20. யானைக்கு களிறு போல ஆட்டுக்கு
    1. கலை
    2. கடா
    3. கடுவன்

| | 1 | 2 | 3 |
|---|---|---|---|

21. எதிர்மறை ஏவல் பன்மை வினைமுற்றாக அமைவது
    1. ஓடாதீர்
    2. ஓடுவீர்
    3. ஓடாதே

22. கர்னன் இரப்போர்க்கு இல்லையென்னாது வழங்கும் வள்ளல். இதில் வள்ளல் என்பதன் எதிர்பொருட்சொல்
    1. ஏழை
    2. கொடையாளி
    3. உலோபி

23. தேனீக்கள் தேன்கூடு கட்டின. இதன் செயப்பாட்டுவினை வாக்கிய வடிவம்
    1. தேனீக்களால் தேன்கூடு கட்டப்பட்டது.
    2. தேனீக்களால் தேன்கூடு கட்டப்படுகிறது.
    3. தேன்கூட்டைத் தேனீக்கள் கட்டின.

24. 'படைப்புப் பல படைத்து…' என்னும் புறநானூற்றுப் பாடல் மூலம் புலவர் வெளிப்படுத்துவது
    1. செல்வத்தின் செழிப்பு
    2. மக்கட்பேற்றின் சிறப்பு
    3. கல்வியின் மேன்மை

25. உயர்திணை இருபாற்பொதுப்பெயராக அமைவது
    1. பண்டிதை
    2. புத்திசாலி
    3. மைந்தன்

26. பிறர் நலம் பேணுவோர் இனியர். இதில் குறிப்புவினை
    1. நலம்
    2. பிறர்
    3. இனியர்

27. எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. இதில் வந்துள்ள வியங்கோள்வினை சுட்டும் பொருள்
    1. வேண்டுதல்
    2. விதித்தல்
    3. வாழ்த்துதல்

28. ஆண்டு எட்டு மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றனர். இதில் வந்துள்ள செயப்படுபொருள் அடைமொழி
    1. ஆண்டு
    2. சிறந்த
    3. எட்டு

29. கார்காலத்துக்குரிய திங்கள்கள்
    1. ஆனி, ஆடி
    2. ஆவணி, புரட்டாதி
    3. ஐப்பசி, கார்த்திகை

30. விவேகிகள் கிடைத்ததைக் கொண்டு முன்னேறுவர். இக்கருத்தை விளக்கும் பழமொழி
    1. விளையும் பயிரை முளையிலே தெரியும்
    2. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்
    3. உடையவன் பாராத வேலை ஒரு முழம் கட்டை

(30×1=30 புள்ளிகள்)

## 2. சேர்த்தெழுதுக.

1. பருவம் + மழை = ______________________
2. திரு + அடி = ______________________
3. முள் + செடி = ______________________
4. நான்கு + புறம் = ______________________
5. இயற்கை + வளம் = ______________________
6. செம்மை + கதிர் = ______________________
7. குடி + அரசு = ______________________
8. வீடு + தோட்டம் = ______________________

(8×1=8 புள்ளிகள்)

## 3. பிரித்தெழுதுக.

1. உழவுத்தொழில் = ______________ + ______________
2. கலையின்பம் = ______________ + ______________
3. வடகிழக்கு = ______________ + ______________
4. மணிப்புறா = ______________ + ______________
5. வான்பரப்பு = ______________ + ______________
6. காவலரண் = ______________ + ______________
7. மூவேந்தர் = ______________ + ______________
8. தேசத்தொண்டர் = ______________ + ______________

(8×1=8 புள்ளிகள்)

## 4. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. சுவிற்சர்லாந்து நாடு எத்தகைய அரசியல் அமைப்பினைக் கொண்டது? 1புள்ளி

______________________________________________

2. சிலப்பதிகாரத்தில் வரும் மூன்று காண்டங்களையும் தருக. 1புள்ளி

______________________________________________

3. ஈழத்தில் தமிழரின் தொன்மைத்தாயகமாக விளங்கும் பகுதிகள் எவை? 1புள்ளி

4. புலப்பெயர்வு என்றால் என்ன? 1புள்ளி

5. ஆகுபெயர் என்றால் என்ன? (1 புள்ளி)

6. வேற்றுமை என்றால் என்ன? 5ஆம் வேற்றுமையின் உருபுகளைத் தருக. (2புள்ளிகள்)

7. தன்வினை, பிறவினை இரண்டையும் எடுத்துக்காட்டுடன் விளக்குக. (2புள்ளிகள்)

8. இடைச்சொல் என்றால் என்ன? உவமையுருபாக வரும் இடைச்சொல்லுக்கு எடுத்துக்காட்டுத் தருக. (2புள்ளிகள்)

**5. கீழ்க்காணும் சொற்கள் பெயராகவும் வினையாகவும் வர வாக்கியங்கள் எழுதுக.**

1. கல்

பெயர்: ______________________________

______________________________

வினை: ______________________________

______________________________

2. ஆறு

பெயர்: ______________________________

______________________________

வினை: ______________________________

______________________________

(4×1=4 புள்ளிகள்)

**6. திருக்குறள்களை நிறைவு செய்க.**

| வாரி | உழவர் | செல்வருஞ் | தக்காரும் |
|---|---|---|---|

1. தள்ளா விளையுளும் ______________________ தாழ்விலாச்

______________________ சேர்வது நாடு.

2. ஏரின் உழாஅர் ______________________ புயல்என்னும்

______________________ வளங்குன்றிக் கால்.

(4×1=4 புள்ளிகள்)

**7. கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

தண்டலை மயில்களாட தாமரை விளக்கந் தாங்க
கொண்டல்கள் முழவினேங்க குவளை கண் விழித்து நோக்க
தெண்டிரை எழினி காட்ட தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட மருதம் வீற்றிருக்கும் மாதோ.

1. இப்பாடல் இடம்பெற்ற காவியம் எது? (1 புள்ளி)

_______________________________________________

2. இப்பாடலைப் பாடியவர் யார்? (1 புள்ளி)

_______________________________________________

3. இப்பாடலில் சிறப்பிக்கப்பெற்றுள்ள நிலம் எது? (1 புள்ளி)

_______________________________________________

4. மகரயாழின் இசைக்கு ஈடாக ஒலிப்பவை எவை? (1 புள்ளி)

_______________________________________________

5. இப்பாடலில் குறிப்பிடப்பெற்றுள்ள மலர்களின் பெயர்கள் இரண்டு தருக. (1 புள்ளி)

_______________________________________________

6. இப்பாடலிலிருந்து பின்வருவனவற்றைத் தருக.

   அ. சினைப்பெயர் ____________________ ஆ. வினையெச்சம் ____________________

   (2×½=1 புள்ளி)

**8. கீழ்க்காணும் தலைப்புகளுள் ஒன்றினைப்பற்றி 125 சொற்களுக்குக் குறையாமல் எழுதுக.**

1. தமிழ்மொழியின் மேன்மை
2. பண்டாரவன்னியன் (9 புள்ளிகள்)
3. நான் விரும்பும் தொழில்

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

## பகுதி – 2

**1. கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

சூரியன் பரந்து விரிந்திருந்த தனது கதிர்களைச் சுருக்கிக்கொண்டு மேற்குக்கடலிலே மூழ்கிவிடுகிறது. இருள் மெல்லமெல்லப் பரவத் தொடங்குகிறது. கீழ்வானில் முழுநிலா உவகையோடு உதயமாகின்றது. அன்று முழுநிலவு நாளாகையால் பென்னம்பெரிய வெள்ளித்தட்டுப்போல அது தோற்றமளிக்கிறது. வானம் என்னும் பெரிய பொய்கையிலே மலர்ந்த வெண்டாமரை போலவும் முகத்தை மட்டுமே காட்டும் அழகிய மங்கை போலவும் காட்சியளிக்கிறது. அந்த மங்கையின் கூந்தலிலிருந்து சிதறிய முல்லை மலர்கள் போல விண்மீன்கள் தெரிகின்றன. முழுநிலவின் வரவினால் தாமரை மலர்கள் கூம்ப அல்லி மலர்கள் மனம் மகிழ்ந்து இதழ்களை விரிக்கின்றன. செழித்து வளர்ந்திருந்த செடிகொடிகள் நிலவின் ஒளியில் மூழ்கி அமுதம் சிந்துகின்றன. இவ்வேளையில் சில சேவல்கள் பொழுதுவிடிந்து விட்டதென எண்ணிக் கூவுகின்றன.

1. இக்காட்சிகள் நிகழும் நாள் எது?

   ______________________________________________

2. முழுநிலவின் தோற்றம் எவ்வாறு வர்ணிக்கப்பெற்றுள்ளது?

   ______________________________________________

   ______________________________________________

3. நிலவின் ஒளியில் அமுதம் சிந்துவன எவை?

   ______________________________________________

4. விண்மீன்களுக்கு எவை உவமையாகக் கூறப்பெற்றுள்ளன?

   ______________________________________________

5. முழுநிலவின் வரவைக்கண்டு இதழ்விரிக்கும் மலர்கள் எவை?

   ______________________________________________

6. பொழுது விடிவதை எடுத்துக்காட்டும் நிகழ்வாக எது கூறப்பெற்றுள்ளது?

   ______________________________________________

(6×1=6 புள்ளிகள்)

**2. பொருத்தமான இணைப்பிடைச்சொற்களை வைத்து கீறிட்ட இடங்களை நிரப்புக.**

| ஆனால் | அதனால் |
|---|---|

1. முயற்சி திருவினையாக்கும். ______________________ நாம் கடுமையாக உழைக்க வேண்டும்.

2. சிறுவன் வேகமாக ஓடினான். ______________________ அவனால் முதல் இடத்தைப் பெறமுடியவில்லை.

3. இன்று பனிப்பொழிவு அதிகமாக உள்ளது. ______________________ பள்ளிகளுக்கு விசேட விடுமுறை விடப்பட்டுள்ளது.

4. விளையாட்டுகளில் ஈடுபடுவது சிறந்த பொழுதுபோக்காகும். ____________________ நாள் முழுவதையும் விளையாட்டுக்காகச் செலவிடுவது நல்லதல்ல.

5. வேடன் காட்டில் வலையை விரித்தான். ______________________ பறவைகள் வலையில் சிக்கவில்லை.

6. சமூக வலைத்தளங்களால் பல்வேறு பிரச்சனைகள் உருவாகியுள்ளன. ______________________ மாணவர்கள் தேவைக்கேற்ப பயன்படுத்துதல் வேண்டும்.

(6×1=6 புள்ளிகள்)

**3. கீழ்க்காணும் உரைப்பகுதிகளுள் உமக்குத் தெரிந்த மொழியிலுள்ள உரைப்பகுதியினைப் படித்து அதன் தமிழாக்கத்தை எழுதுக.**

Deutsch:

Der grosse Reichtum der Natur ist Wasser. Kein Lebewesen kann ohne Wasser überleben. Wir bekommen Wasser aus Brunnen, Teich, Fluss, Regen und Quellen. Wasser ist notwendig, damit die Welt grün ist und die Landwirtschaft gedeiht. Die Grundwasserleitungen sollten wir stets sauber halten. Meer, Flüsse, Wasserfälle, Brunnen sind natürliche Gewässer. Pools, Kanäle und Stauseen dagegen sind künstliche Gewässer. Die Vorteile durch die Gewässer für Individuen, Gemeinschaften, Nationen und die Welt sind vielfältig.

French:

La richesse la plus importante que nous offre la nature est l'eau. Sans eau, aucun être vivant ne peut survivre. Nous l'obtenons par les puits, les lacs, les rivières, la pluie et les sources d'eau. L'eau est essentielle pour que la verdure perdure et l'agriculture prospère. Il est essentiel de garder les différentes sources d'eau propres. Les mers, les rivières, les cascades et les sources sont des sources naturelles d'eau. Les lacs, les ruisseaux et les barrages sont des sources artificielles d'eau. Grâce à ces différentes sources d’eau, non seulement l’homme mais aussi les communautés, les pays et le monde entier bénéficient de beaucoup d’avantages.

Italy :

La ricchezza più importante donateci dalla natura è l’acqua. Nessun essere vivente può sopravvivere senza acqua. Possiamo ottenerla attraverso pozzi, laghi, fiumi, pioggia e sorgenti d’acqua. L’acqua è essenziale per il verde e per l’agricoltura. È fondamentale mantenere puliti i vari risorse d’acqua. Mari, fiumi, cascate e sorgenti sono fonti d’acqua naturali. Pozzi, dighe e ruscelli sono fonti d’acqua artificiali. Attraverso le seguenti possibilità non solo un singolo individuo ma è un’intera comunità, nazione e mondo intero ne trae vantaggio.

(4 புள்ளிகள்)

**4. கீழ்க்காணும் உரைப்பகுதியை மூன்றிலொரு பகுதியாகச் சுருக்கி எழுதுக.**

விருந்தோம்பல் என்பது எம்மிடம் புதிதாய் வந்த விருந்தினரைப் பாதுகாத்தல் என்று பொருள்படும். ‘விருந்தே புதுமை’ என்கிறது தொல்காப்பியம். புதுமை என்ற பொருளுடைய விருந்து என்ற சொல் புதிதாக வந்தவரை உணர்த்தியது. அவர்களுள் முன்னே அறிந்து வந்தவர்களும் அறியாது வந்தவர்களும் அடங்குவர். அறிந்தும் அறியாதும் வந்தவர்களை உபசரிப்பதே விருந்தோம்பலாகும். உணவு, உடை, இடம் தந்து அன்போடு போற்றலாகையால் அன்புடைமையின் பின் விருந்தோம்பல் என்னும் அதிகாரத்தை வள்ளுவர் வகுத்துள்ளார். இவ் அதிகாரத்திலுள்ள பத்துக் குறட்பாக்களும் விருந்தோம்பும் பண்பினை விளக்குகின்றன. விருந்து வழங்குபவர் விருந்தினரை முகமலர்ச்சியோடு இன்சொற் கூறி வரவேற்பர். குளிர் நீர் கொடுத்துக் களைப்பை நீக்குவர். உண்ணும் போது அன்புடன் உணவு வகைகளைப் பரிமாறுவர்.

இறுதிப்புள்ளிகள்

| பணியகப் பயன்பாட்டிற்கு: | | | |
|---|---|---|---|
| விடைத்தாள் மதிப்பீடு | முழுப்பெயர் | கையொப்பம் | மொத்தப்புள்ளி |
| முதலாம் முறை | | | |
| இரண்டாம் முறை | | | |
| இறுதிப்புள்ளிகள் | | | |